# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

**(Re-accredited with "A+" Grade by NAAC)**

**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024**

**முனைவர். க. துரையரசன்,** எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.
**தேர்வு நெறியாளர்**

**தொலைபேசி : 0431- 2407016, 2407060**
**தொலைஅச்சு: 0431 – 2407444**
**மின்னஞ்சல் : coe@bdu.ac.in**
**இணையதளம்: www.bdu.ac.in**

---

**ந.க.எண். இளநிலை / நவம்பர் 2019 எழுத்துக்தேர்வுகள் / 2019** **நாள்: 19-08-2019.**

பெறுநர்

முதல்வர்
இணைவு பெற்ற தன்னாட்சி அல்லாத அனைத்துக் கல்லூரிகள்.

அய்யா / அம்மையீர்,

பொருள் : நவம்பர் 2019-ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக இளநிலைத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் தேர்வுகள் துவங்கும் நாள் - தெரிவித்தல் - தொடர்பாக.

-----

நவம்பர் 2019-ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக இளநிலைத் தேர்விற்குப் பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்களைப் பெறுவதற்குரிய கடைசி நாள் மற்றும் தேர்வுகள் துவங்கும் நாள் ஆகியவை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| தண்டத்தொகையின்றி மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறுவதற்குக் கடைசி நாள் | : | **13-09-2019** (வெள்ளிக்கிழமை) |
| தண்டத்தொகையின்றி பெறப்பட்ட விண்ணப்பங்கள் கல்லூரி வாயிலாகப் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் | : | **16-09-2019** (திங்கட்கிழமை) |
| தண்டத்தொகையுடன் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறுவதற்குக் கடைசி நாள் | : | **20-09-2019** (வெள்ளிக்கிழமை) |
| தண்டத்தொகையுடன் பெறப்பட்ட விண்ணப்பங்கள் கல்லூரி வாயிலாகப் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் | : | **23-09-2019** (திங்கட்கிழமை) |

***(16-09-2019-க்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் தண்டத்தொகை ரூபாய் 300/- மற்றும் அதற்குரிய 18% GST கூடுதலாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்)***

**இளநிலைப் பருவத்தேர்விற்கான எழுத்துத்தேர்வுகள் துவங்கும் நாள் : 07-11-2019 (வியாழக்கிழமை)**

**…2**

மேற்கண்ட தகவலை மாணவர்களும் மற்றும் ஆசிரியர்களும் தெரிந்துகொள்ளும் வகையில் சுற்றறிக்கை வாயிலாகவும் கல்லூரி அறிவுப்புப்பலகையிலும் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

90 நாட்கள் கல்லூரி இயங்கியதற்குரிய சான்றிதழைத் தேர்வு துவங்குவதற்குப் பத்து நாட்கள் முன்னதாகப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இளநிலைப் பாடப்பிரிவுகளுக்கான தேர்வு விண்ணப்பங்களைப் பாடவாரியாக (**B.A., B.Sc., B.Com., B.Lit., B.B.A., etc.,**) தனித்தனியாக இணைப்புக் கடிதங்களுடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. இணையதளம் வழியாக செலுத்தப்பட்ட **E**-ரசீதுடன் தேர்வுக்கட்டண சுருக்கப்பட்டியல் (Abstract for Examination fee – Downloadable from University Website) கண்டிப்பாக அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு தேர்வுக்கட்டண சுருக்கப்பட்டியல் இல்லாத **E**-ரசீதுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என கனிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மீளப்பயிலுதல் (**Redo**), மறுசேர்க்கை (**Re-admission**) மற்றும் மாற்றுச்சேர்க்கை (**Transfer Admission**) என்பதனைத் தேர்வுக்கட்டண சுருக்கப்பட்டியலில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மேற்கண்ட சேர்க்கைகளுக்காகப் பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட ஆணையின் நகலை இணைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் அனைத்தும் பல்கலைகழகத்திற்கு வந்து சேரவேண்டிய கடைசி நாளான 23-09-2019 திங்கட்கிழமைக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

இக்கடிதம் கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புகை அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

Sd.xxxx 19-08-2019.
**தேர்வு நெறியாளர்**

குறிப்பு : பல்கலைக்கழக தேர்வுகள் தொடர்பான தகவல்களை பல்கலைக்கழக இணைய தளத்தில் (Website) பார்த்துத் தெரிந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. (www.bdu.ac.in)